**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11.08.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேசிய நூலகர் தினம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இந்திய நூலகத் தந்தையாகப் போற்றப்படும் டாக்டர். எஸ். ஆர். இரங்கநாதன் அவர்களை சிறப்பிக்கும் வண்ணம் அவரது பிறந்தநாளான **ஆகஸ்ட் 12 தேதி** வருடா வருடம் தேசிய நூலகதினமாக நம் நாட்டில் கொண்டாடப்படுகிறது. நமது பல்கலைக்கழக நூலகத்திலும் வரும் பன்னிரண்டாம் தேதி பத்மஸ்ரீ டாக்டர். எஸ். ஆர். இரங்கநாதன் அவர்களின் 130வது பிறந்தநாளில் தேசிய நூலகர் தினம் கொண்டாடப்பட இருக்கிறது.

**இவ்விழாவில் கீழ்க்காணும் நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன.**

முற்பகல் நிகழ்ச்சியாக CABI மண்டல மேலாளரான டாக்டர் ராபி மேத்யூ CABI பற்றி விளக்கவுள்ளார். மேலும் திரு. ரவிசங்கர் அவர்கள் CeRA மின் வளங்களைப் பற்றி மாணவர்களுக்கு எடுத்துரைக்கவுள்ளார். அவற்றைத் தொடர்ந்துபல்கலைக்கழக நூலகத்தில் பணிநிறைவடைந்த நூலகர்களுக்கு மாணவர் நலமைய முதன்மையர் மரியாதை செய்யவிருக்கிறார்.

பிற்பகல் நிகழ்ச்சி மற்றும் நிறைவு விழாவில், சிறப்பு விருந்தினராக அகில இந்திய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிலையத்தின் ஒளிபரப்புத் துறைத் தலைவர் திரு. ஆர்.முரளி கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார். மேலும் நூலகர் தின விழாவை ஒட்டி மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் பல்கலைக்கழக நூலகத்தில் நடத்தப்பட்டன. அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு விருந்தினரால் பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப்படவுள்ளது. இந்நிகழ்ச்சியின் இறுதியாக முனைவர். சி. பிரேமா, நூலகர், பல்கலைக்கழக நூலகம், கோயம்புத்தூர் நன்றியுரையாற்றவுள்ளார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**